**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**
**முன்னிலை: திருமதி.N.ஷர்மிளா, B.A.,B.L.,**
**சார்பு நீதிபதி, சத்தியமங்கலம்**

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 17-ம் நாள் வியழக்கிழமை
(2054 திருவள்ளுவராண்டு ஸ்ரீ சோபகிருது வருடம் ஆடித்திங்கள் 32-ம் நாள்)

<u>நிறைவேற்று மனு எண்.24/2022</u>
<u>உள்</u>
<u>அசல் வழக்கு எண்.194/2017</u>

S.சேமலை ... தீர்ப்பு பெற்றவர்/வாதி

/எதிர்/

R.வீரமணி ... தீர்ப்புகடனாளி/பிரதிவாதி

இம்மனுவானது 16.08.2023-ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.R.துரைசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், மனுதாரர் தரப்பில் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இதுநாள் வரையில் இந்த நீதிமன்றம் ஆய்விலிருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

<u>உத்தரவு</u>

நிறைவேற்று மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 11(2)ன் படி மனுவில் கண்ட தீர்ப்பாணைத் தொகையை வசூல் செய்யும் பொருட்டு அறிவிப்பு அனுப்பியும், தொகை செலுத்தாதபட்சத்தில் அவரை கைது செய்து சிவில் சிறையில் அடைத்து தீர்ப்பாணைத் தொகையை வசூல் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுவின் சுருக்கம்:</u>

மனுவில் அ.வ.எண்.194/2017-ல் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு தர வேண்டிய தொகையை வசூல் செய்யும் பொருட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு தீர்ப்பாணை தொகையாக ரூ.1,29,333/-ம் மற்றும் வட்டி மற்றும் செலவுத் தொகை மொத்தம் ரூ.1,81,539.50/- மனு தாக்கல் செய்யப்பட்ட தேதிவரை செலுத்தவேண்டியுள்ளது என்றும், இதுவரை மேற்படி தொகையை எதிர்மனுதாரர் செலுத்தவில்லை என்றும், எனவே மனுவில் கண்ட தீர்ப்பாணைத் தொகையை வசூல் செய்யும் பொருட்டு அறிவிப்பு தீர்ப்பு கடனாளிக்கு அனுப்பி தொகை செலுத்தாதபட்சத்தில் அவரை கைது செய்ய சிவில் சிறையில் அடைத்து தீர்ப்பாணைத் தொகையை வசூல் செய்து கொடுக்க வேண்டுமென்று என்று கூறுப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்.

4. <u>தற்போது இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்:</u>

இம்மனு அனுமதிக்கப்பட வேண்டியதா? இல்லையா என்பதே ஆகும்?

5. இந்த மனு விசாரணையின் போது மனுதாரர் திரு.சேமலை ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>6. தீர்வு</u>

6.1 மனுதாரர் தரப்பில் கேட்கப்பட்டது. மனு, வழக்கு ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

6.2. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில், மனுவில் அ.வ.எண்.194/2017-ல் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு தர வேண்டிய தொகையை வசூல் செய்யும் பொருட்டு

தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு தீர்ப்பாணை தொகையாக ரூ.1,29,333/-ம் மற்றும் வட்டி மற்றும் செலவுத் தொகை மொத்தம் ரூ.1,81,539.50/- மனு தாக்கல் செய்யப்பட்ட தேதிவரை செலுத்தவேண்டியுள்ளது என்றும், இதுவரை மேற்படி தொகையை எதிர்மனுதாரர் செலுத்தவில்லை என்றும், எனவே மனுவில் கண்ட தொகையை வசூல் செய்யும் பொருட்டு அறிவிப்பு தீர்ப்பு கடனாளிக்கு அனுப்பி தொகை செலுத்தாதபட்சத்தில் அவரை கைது செய்ய சிவில் சிறையில் அடைத்து தீர்ப்பாணைத் தொகையை வசூல் செய்து கொடுக்க வேண்டுமென்று வாதிட்டார்.

6.3. எதிர்மனுதாரர் தரப்பில் இந்த மனுவை நிராகரிக்கும் வகையில் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்உரை தாக்கல் செய்யவோ, எதிர்வாதம் புரியவோ முன்வவரவில்லை. எனவே இந்த நிலையில் அசல் வழக்கின் தீர்ப்பாணையின் படி எதிர்மனுதாரர் மனுதொகையை திருப்பி செலுத்த கடமைப்பட்டவர்.

6.4. இந்த மனுவில் மனுதாரர் ம.சா.1 விசாரிக்கப்பட்டு தன்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் எதிர்மனுதாரர் தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத்துறையில் பொறியாளராக இருந்து ஓய்வு பெற்று தற்போது ரியல் எஸ்டேட் தொழில் செய்து பெரும் வருமானம் ஈட்டி வருவதாகவும், தீர்ப்பாணை தொகை செலுத்துவதற்கும், அவரிடம் போதிய பணவசதி இருப்பதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.5. மேற்படி தீர்ப்பு கடனாளி தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத்துறையில் பொறியாளராக இருந்து ஓய்வு பெற்று தற்போது ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதன் மூலமாகவும், போதுமான தொகை வைத்திருப்பதாகவும் உள்ள ம.சா.1 சாட்சியங்களை ஏற்று நீதிமன்றம் இந்த மனுவை அனுமதிக்கலாம் என்று முடிவு செய்கிறது.

**7.** முடிவாக, இந்த நிறைவேற்று மனு அனுமதிக்கப்படுகிறது. எதிர்மனுதாரர்/தீர்ப்புக்கடனாளியை கைது செய்து சிவில் சிறையில் அடைக்க உத்தரவிடப்படுகிறது. அழைக்க 06.12.2023 படி மெமோ 3 நாட்களுக்குள் செலுத்த உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுக்கப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்த்து பிழைத் திருத்தங்கள் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 17-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/-N.ஷர்மிளா)
சார்பு நீதிபதி
சத்தியமங்கலம்

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>**

ம.சா.1 திரு.சேமலை (மனுதாரர்)

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** -இல்லை-

**<u>எதிர்மனுதாரர் தரப்பு<br>சாட்சிய மற்றும் சான்றாவணங்கள்:-</u>** -இல்லை-

(ஒம்/-N.ஷர்மிளா)
சார்பு நீதிபதி
சத்தியமங்கலம்.